# கல்கி



KALK
6.6.1971
40

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்



மலர் 30

இதழ் 45

# பெரியவாள் என்ற பேரருள்

**வை**காசி மாத அநுஷ நட்சத்திரம் என்பது நமக்கு ஒரு புண்ணிய தினமாகும். சத்தியத்துக்கும், சநாதன தர்மத்துக்கும், பரம ஞானத்துக்கும், பேரருளுக்கும் ஒரு விக்கிரகமாக நம்மிடை வாழ்ந்து வரும் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பெரியவாள் அவதரித்த புனித நாள் அதுவே. இந்த வைகாசி அநுஷத்தன்று (ஜூன் 8ந் தேதி) அவர்கள் தமது பவித்திரமான பெரு வாழ்வில் எழுபத்தெட்டாவது ஆண்டைத் தொடங்குகிறார்கள்.

சரித்திர காலத்துக்கு முன்பிருந்தே இந்தப் பாரத தேசத்தில் மகா ஞானிகள் பலர் இருந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரது அநுபூதியும் திரண்டு வந்தது போல் இன்று நம்மிடை வாழ்பவர் ஸ்ரீ பெரியவாள். மற்ற ஞானியர் வசித்த காலத்தைவிடத் தீமையும், துராசாரமும், நாஸ்திகமும், லௌகிகமும் மிக மிக மலிந்த காலம் இது. இப்படிப்பட்ட சமயத்தில் பரிபூர்ணமாக சநாதன தர்மத்தை வாழ்ந்து காட்ட ஒரு பெரியவாள் இருப்பதுதான் அதிசயத்திலும் அதிசயம். உலகச் சூழல் ஓரளவு சுத்தமாகவே இருக்கும் போது ஒரு மகான் புரிகிற பணியை ஸ்தூலமாக நன்கு காட்டி விடலாம் — புதிதாகக் கட்டிய ஓர் ஆலயத்தைக் காட்டுவது போல். ஆனால் இடிந்து கொண்டிருக்கும் ஒரு புராதன ஆலயத்தைப் புதுப்பித்து வரும் திருப்பணியை இவ்வளவு தெற்றென வெளிக்காட்ட முடியாது. எனினும் இந்தத் திருப்பணி நடக்கா விட்டாலோ, அத்தனை கோபுரங்களும், விமானங்களும் நொறுங்கி விழுவதைப் பயங்கரமான முறையில் கண்டு விடுவோம். புராதன தர்மம் இவ்வாறு நொறுங்கி விழுகிற சமயத்தில், பெரியவாள் என்ற திவ்விய மூர்த்தி அவதரித்து, இந்தப் பெரும் கோபுரத்தைத் தூக்கி நிறுத்திவருகிறது.

காமகோடி பீடாதிபதி என்கிற முறையில், மடத் தலைவர் என்கிற ரீதியில் அவர்கள் தர்ம ஸம்ஸ்தாபனத்துக்காக ஒரு வைர விழாக் காலத்துக்கும் அதிகமாக அரும் பணி செய்தார்கள். கடந்த இரண்டாண்டுகளாக — அவர்களது எழுபத்தாறுவது ஜயந்தி தினத்திலிருந்து— அவரது திருப்பணிகளுக்கெல்லாம் பட்டாபிஷேகம் போல் ஷண்மத மகாநாடு தொடங்கிய அன்றிலிருந்து — அவர்கள் மடத்திலிருந்தும் விலகியிருக்கிறார்கள். பெரியவாளின் சம்பூரணமான வைராக்கியத்துக்கு இது ஓர் அற்புத சான்று. மகா திரிபுரசுந்தரி சமேத சந்திர மௌளீசுவரரை மணிக்கணக்கில் ஆராதித்துக் கோலாகல பூஜை புரிந்து வந்த பெரியவாள் அதையும் விட்டுவிட்டார்கள்.

அறுபதாண்டுகள் ஓயாத செயலுக்கிடையிலும் செயலின்மையாக, பேச்சுக்கிடையிலும் மௌன நிலையாக இருந்தவர் இரண்டாண்டுகளாகச் செயலின்மைக்குள் செயல்திறனாக, மௌனத்தினுள் மகாவாக்கியமாக வாழ்ந்து வருகிறார். மடத்தையும், பூஜையையும் விட்ட போதிலும் பெரியவாள் விடவே முடியாத ஒன்று உண்டு. அதுதான் அருள் என்பது. சங்கற்பமில்லாமலேயே சூரியன் ஜீவசக்தியைப் பொழிவது போல், சங்கற்பமில்லாமலே சந்திரன் நிலவைப் பொழிவது போல், சங்கற்பமில்லாமலே மலர்கள் நறுமணம் வீசுவது போல், சங்கற்பமில்லாமலே அருளைப் பெருக்கி வருபவர் ஸ்ரீ பெரியவாள். வெளிக் காரியமில்லாவிடினும் அந்த அருள் சக்தி எத்தனை எத்தனையோ ஆன்மாக்களை சத்காரியங்களில் ஊக்கிக் கொண்டுதான் இருக்கும்; வெளிப்படைப் பூஜை இல்லாவிடினும், பெரியவாளின் மௌனமே எண்ணற்ற ஜீவர்களைப் பூஜை புரஸ்காரங்களில் செலுத்திக்கொண்டுதான் இருக்கும்.

இருள்வலையில் வீழ்ந்துள்ள நம்மிடை இந்த அருள் நிலையம் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து, நம்மையும் வாழ்விப்பதற்கு ஸ்ரீ காமாட்சி அன்னை இன்னருள் புரிவாளாக!

# உள்ளும் புறமும்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

(ஸ்ரீ காமகோடி பெரியவாள் அநுபூதிச் சிகரம் மட்டுமல்ல; எளிமையின் எல்லையும் அவர். சின்னஞ் சிறியோரான நம்மைத் தம்மிலும் உயர்த்தி வைத்து அவர் அருளிய உன்னத மொழிகளைப் பாருங்கள்!)

''எல்லோரும் அவரவருக்கு உரிய கர்ம அநுஷ்டானங்களைச் செய்ய வேண்டும்; ஆசாரங்களை அநுசரிக்க வேண்டும்; விபூதி, திருமண், ருத்ராட்சம் போன்ற சின்னங்களைத் தரிக்க வேண்டும்'' என்றெல்லாம் நான் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறேன். சிலர் இதெல்லாம் எதற்கு என்று நினைக்கிறார்கள். ''நல்ல சீலங்களுடன் இருக்க வேண்டியதே முக்கியம். சீலம் மனசைப்பொறுத்த விஷயம். சமய ஆசாரங்களெல்லாம் வெளி விஷயம். இவை இல்லாமலே சீலத்துடன் இருந்தால் போதாதா?'' என்று எண்ணுகிறார்கள்.

உடம்பை வளர்க்கும் பாலைப் போல உள்ளத்தை வளர்ப்பது சீலம். ஆனால் பால் வேண்டும் என்றால் அது தனியாகக் கிடைக்காது. பசுவை வைத்துப் பராமரித்தாலே பால் கிடைக்கும். அதோடு வைக்கோல், சாணம் எல்லாமும் வந்து சேரத்தான் செய்யும். ''பால்தானே வேண்டும்? வைக்கோலும் சாணமும் எதற்கு?'' என்று கேட்டுப் புண்ணியமில்லை. புறச் சடங்குகள் சிலருக்கு வேண்டாத வைக்கோலாகவும், சாணமாகவும் தோன்றலாம். ஆனால் சீலம் என்ற க்ஷீரம் வேண்டுமானால் இவையும் வேண்டும்.

தமக்குள்ளே பரமாத்ம ஸ்வரூபத்தின் பிரகாசத்தை உணர்வதே நிலையான ஆனந்தம். கலங்கிய மனம் தெளிந்தால்தான் உள்ளேயிருக்கும் பரமாத்ம வஸ்து புலனாகும். 'நான்' 'எனது' என்ற அகங்கார உணர்வுடன் காரியங்களைச் செய்யும் வரையில் கலக்கம் தெளியாது. பொதுவான சமூக க்ஷேமம் ஒன்றையே லட்சியமாகக் கொண்டு அவரவருக்கும் விதித்துள்ள கர்மங்களைச் செய்தால் சுயநல எண்ணம் போகிறது; சித்தமலம் நீங்குகிறது; சீலம் பிறக்கிறது; சமூக க்ஷேமத்தோடுகூட பரமாத்ம அநுபவமும் கிடைக்கிறது.

வெளியில் செய்கிற காரியமும், வெளியில் அணிகிற சின்னங்களும் கூட உள்ளுக்கு நன்மை செய்கின்றன. உடலின் காரியமும் உள்ளத்தின் பாவமும் பரஸ்பரம் சம்பந்தமுடையவை. ஒரு திருஷ்டாந்தம் சொல்கிறேன்: லாட்டரியில் தமக்கு லட்ச ரூபாய் விழுந்திருக்கிறது என்று ஒருவர் சற்றும் எதிர்பாராமல் கேள்விப்படுகிறார். உடனே எல்லையில்லாத சந்தோஷம் உண்டாகிறது. இது ஒரு மனோபாவம்தான். ஆனால் இந்த மனோபாவம் காரணமாக அவரது உடம்பில் ஒரே படபடப்பு உண்டாகிறது. மூச்சு அப்படியே சிறிது காலத்துக்கு அடங்கி மூர்ச்சையாகி விடுகிறார். 'குறிப்பிட்ட உணர்வு உண்டானால் இன்னவிதமாக சுவாசம் மாறுகிறது' என்ற நடைமுறை உண்மையைத் திருப்பி வைத்துக் குறிப்பிட்டபடி சுவாசப் பயிற்சி - பிராணாயாமாதிகள் - செய்தால், இன்ன ஆத்ம க்ஷேமங்களை அடையலாம் என்று யோக சாஸ்திரம் விவரிக்கிறது. வெளித் தோற்றமே உள் உணர்வைச் சொல்கிறது. கோபம் வந்தால் கண் சிவக்கிறது. உதடு துடிக்கிறது. துக்கம் வந்தால் எதற்காகவோ கண்ணிலிருந்து ஜலம் ஜலமாகக் கொட்டுகிறது. சந்தோஷம் வந்தால் பல்லெல்லாம் தெரிகிறது. உடம்புக்கும் உணர்வுக்கும் சம்பந்தம் இருப்பதால் இன்னபடி ஆசனம் போட்டால் இந்தந்த ஆத்ம குணங்களுக்கு அநுகூலமாகும் என்று மகான்கள் வழி கண்டிருக்கிறார்கள்.

மிலிடரிக்காரன் யூனிபாரம் போடாவிட்டால் அவனுக்கு வீரம் வராதா என்று கேட்பவர்கள் கேட்கலாம். ஆனால் மிலிடரிக்காரன் என்றால் லோகம் முழுக்க அவனுக்கென்று யூனிபாரம் இருக்கத்தான் இருக்கிறது. அதுவே வீரத்தைத் தூண்டுகிறது என்றும் சொல்கிறார்கள்.

வெளியில் தரிக்கும் சின்னம், வெளியில் செய்கிற சம்ஸ்காரம் இவை உள்ளுக்கும் நன்மை தருவன. வெறும் வேஷம் என்று நினைத்தால் வேஷமாகவே போகும். 'ஆத்மார்த்தமாக, ஜீவனைப் பரிசுத்தம் செய்து கொள்வதற்காக இந்த சம்ஸ்காரத்தைச் செய்கிறேன்; சின்னத்தை அணிகிறேன்' என்று உணர்ந்தால் சத்தியமாகவே உள்ளே சுத்தி செய்கிறது. புறத்தில் செய்வது உள்ளுக்கு உதவுகிறது.

நான் சம்ஸ்காரங்களை முக்கியமாகச் சொல்வதோ, ஆசாரங்களை விடாமலிருப்பதோ, விபூதி, ருத்திராட்சம் முதலிய சின்னங்களைத் தரிப்பதோ பெரிதில்லை. நான் மடாதிபதி. ஆதலால் இதெல்லாம் என்னிடம் இருந்தால்தான் என்னிடம் வருவீர்கள்; என் மடம் நடக்கப் பணம் கொடுப்பீர்கள். எனவே இவையெல்லாம் எனக்குக் காரியார்த்தமாகவும் வேண்டியிருக்கின்றன. ஆனால் உங்கள் விஷயம் அப்படியில்லை. உங்களுக்கு ஜீவனோபாயம் வேறு விதத்தில் கிடைத்துவிடுகிறது. ஆதலால் என்னைவிட சிரேஷ்டமாக, முழுக்க முழுக்க ஆத்மார்த்தமாகவே நீங்கள் சம்ஸ்காரங்களைச் செய்து, சின்னங்களைத் தரித்துக் கொண்டு பரிசுத்தம் பெற முடியும்.

பரம சத்தியத்தை நினைவூட்டும் சின்னங்களைத் தரித்துக் கொள்வோம்; கெட்ட வழியில் போகாமல் தடுக்கும் நல்ல கர்மங்களை அநுஷ்டிப்போம்; அதனால் சீலம் பெறுவோம்; சித்த சுத்தி பெறுவோம்; இந்தத் தெளிவின் பயனாக அனைத்துமான ஏக பரம்பொருளை உணர்வோம்; ஆனந்தமாக இருப்போம்!

நம: பார்வதி பதயே! ஹர ஹர மகாதேவ!

# காஞ்சி ஜகத்குரு: தெய்விகத்தின் திரு உருவம்

டெஹரான் சர்வகலாசாலையின் துணைவேந்தர் ஸய்யீத் ஹுஸைன் நாஸர்

[ஆழ்கடல் நதியை அழைத்துத் தன்னில் ஒடுக்கிக் கொள்வதுபோல், ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பெரியவாளின் திருவுள்ளம் சில பரிபக்குவம் வாய்ந்த ஆன்மாக்களைக் கண்ட மாத்திரத்தில் தன்னிடம் லயிக்கச் செய்து விடும். இந்தப் பேரருள் பிரவாகத்துக்குப் பாத்திரமாகும் பாக்கியத்தைப் பெற்ற ஒருவர் பெர்ஷியாவிலுள்ள டெஹரான் சர்வகலாசாலைத் துணைவேந்தரான தத்துவப் பேரறிஞர் டாக்டர் ஸய்யீத் ஹுஸைன் நாஸர் அவர்கள். சென்ற ஆண்டு டிசம்பர் 11ந் தேதியன்று அவர் உண்மையான ஆத்ம தாகத்துடன், ஞானப் பசியுடன் காஞ்சிபுரத்தில் ஒரு பனந்தோப்பில் ஸ்ரீ காமகோடி பெரியவாளை அணுகினார். ஆத்மிக காமதேனுவான பெரியவாள் அப்போதைக்கப்போதே அவரது தாகத்தைத் தீர்த்தார்; ஞானத்தில் அக்ஷய பாத்திரமான பெரியவாள் அவருக்கு உளம் புடைக்க அமுது படைத்தார். அந்தக் கனமான அநுபவத்தில் அமுந்திப் போனார் இஸ்லாம் மதத்தவரான ஸய்யீத் ஹுஸைன் நாஸர். பெரியவாளை விட்டுப் பிரியாவிடை கொண்டு காஞ்சியிலிருந்து புறப்பட்ட பின்பும் தாயை நினைக்கும் குழந்தையாகவே இருந்தார். கார் வெகுதூரம் வளைந்து வளைந்து வருகின்றபோது காரினுள்ளேயே பெரியவாள் இருக்கும் திசை நோக்கித் திரும்பித் திரும்பி அமர்ந்து வணங்கினார். பெரியவாளிடம் இவ்விதம் பக்தியில் நனைந்த அந்தப் பேராசிரியரிடமிருந்து, சென்னை சர்வகலாசாலை தத்துவத் துறையைச் சேர்ந்த பேராசிரியர் டாக்டர் வீழிநாதன் அவர்கள் வரவழைத்துள்ள 'சிறப்புக்' கட்டுரையை, நமது பரமாசாரியர்கள் எழுபத்தெட்டாம் பிராயத்தில் பிரவேசிக்கும் இந்தப் புண்ணிய சமயத்தில் அஞ்சலி பூர்வமாக இங்கு வெளியிடுகிறோம்.

— ஆசிரியர்]

சர்வ சுதந்திரம் வாய்ந்த தெய்வ சக்தி மட்டும் விருப்பம் கொண்டுவிட்டால் போதும், தன்னையே ஓர் உருவில் வெளிப்படுத்திக் கொள்கிறது. இதை சுய அநுபவத்தில் காண வேணுமென்றால், புனிதர்களான ஸ்ரீ ஜகத்குருவின் திரு வடிவைக் கண்டாலே போதும். அவரிடமிருந்து நமக்குப் புத்துயிரூட்டும் ஒரு தென்றல் வீசிக் கொண்டேயிருக்கிறது. அந்தத் தென்றலின் குளிர்ச்சி மனிதனைத் தெய்வத்திடமிருந்து பிரித்து வைக்கும் உலகியல் வாழ்வு என்ற தீயை அடியோடு அணைத்து விடுகிறது. இந்தத் தென்றலை அநுபவிக்கும் கௌரவத்தை, அநுக்கிரகத்தைப் பெற்றாலே போதும், சர்வ சக்தி வாய்ந்த தெய்வ சுதந்திரம் தன் இச்சைப்படி ஓர் உருவை எடுத்துக் கொண்டு வெளிப்படுகிறது என்பதை உணர்ந்துவிடலாம்.

முஸ்லீமாகிய நான் இஸ்லாம் மதத்தின் பரம புனிதமான திருக்கோயில்களிலும், முஸ்லீம் மத மகா ஞானிகளின் சந்நிதியிலும் எந்தத் தேஜோமயத்தின் நெருக்கத்தை நன்கு உணர்ந்திருக்கிறேனோ, அதே ஒளியின் அண்மையைக் காஞ்சிபுரத்துப் பனந்தோப்பில் புனித

"புத்துயிரூட்டும் தென்றல்"



ஜகத்குருவிடம் அநுபவித்தேன். பாரத தேசத்தின் அமரத்துவத்துக்கே உரியதொரு பேசாமொழி உண்டு. அந்த அமிருத மௌனம் இமாலயக் கொடுமுடிகளைப் போலவே நிரந்தரமாக, ஆழமாக வேரூன்றி நிலைத்த ஒன்று. இந்த அமுத மௌனநிலை ஜகத்குருவின் கண்களில் பிரகாசிக்கிறது. அந்தக் கண்களின் ஒளிக்கிரணம் நமது இதயத்தின் மத்திக்கே துளைத்துச் செல்கிறது; அங்கு சர்வேசுவரனின் சிம்மாதனம் போடப்பட்டிருப்பதைக் காட்டுகிறது. ஜகத்குருவின் கடாக்ஷம் பட்ட மாத்திரத்தில், பித்தளை பொன்னாவதுபோல் இதயத்தில் உடனுக்குடனே ஒரு ரஸவாதம் நிகழ்கிறது; மாமிச பிண்டம் மாணிக்கமாகிறது; அந்த மாணிக்கத்தில் அந்தராத்ம ஒளி பிரதிபலிக்கிறது; உள்ளுக்குள்ளிருந்தே ஜீவனின் உண்மை நிலை முழுதும் வெளிப்பட்டு ஒளிமயமாகிறது. ''பகவன் நாமத்தில் நம்மை இட்டு நிரப்பிக் கொள்ள வேண்டும், நம் இதயத்தில் பகவன் நாமத்தை இட்டு நிரப்பிக் கொள்ள வேண்டும் — இந்த ஒரு வாக்கியத்தில் ஆத்மிக வாழ்வு முழுவதும் அடக்கம்'' என்ற உண்மையை அவரது சந்நிதானத்தில் உணர்கிறோம்.



''தேஜோமயத்தின் நெருக்கம்''

இந்த உலகம் உயிர் வாழ்வது ஜகத்குருவின் சாந்நித்தியத்தாலும், அவரைப் போன்ற ஆத்ம ஞானிகளின் சாந்நித்தியத்தாலுமேயாகும். இவர்கள் மூலம் பகவானே, தான் இருப்பதை மனித குலத்திடமும், பிரபஞ்சம் முழுவதிலும் வெளிப்படக் காட்டுகிறான். மனித இனம் என்று ஒன்று இந்த உலகில் எதற்காக உயிர் வாழ்கிறதோ, அதன் நோக்கம் முழுவதையும் பூர்த்தி செய்பவர்கள் இந்த ஞானியரே.

இன்று ஹிந்து மதத்துக்குத் தேவைப்படுகிறவர்கள், அந்த மதத்தில் ஏதோ குறைகள் இருப்பது போல் கருதி மன்னிப்புக் கோரும் மனப்பான்மை கொண்டவர்கள் அல்ல; அல்லது, அதன் சித்தாந்தங்களைப் பெரிதாக ஆராய்பவர்கள் அல்ல; அல்லது, அதன் கடவுட் கொள்கையை விளக்கி விஸ்தரிப்பவர்களும் அல்ல. ஹிந்து மதத்தின் தேவை, அதன் உபதேசங்களின் பரிசுத்தத்தை உறுதியாகப் பாதுகாக்கக்கூடிய சக்தி பெற்ற முனிவர்களேயாவர். இப்படிப்பட்டவர்கள் இன்று எல்லா மதங்களுக்கும் தேவைப்படுகிறார்கள். ஹிந்து மதத்துக்கும் இந்தத் தேவை உள்ளது. இச்சமயத்தில் ஹிந்துமத உபதேசத்தின் தூய்மையைக் காத்து உறுதிப்படுத்தி வரும் ஜகத்குருவின் சாந்நித்தியம் இன்னும் பல காலத்துக்குத் தொடர்ந்து இம்மதத்தை வாழ்வித்து அருளுமாக!